Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 124

வெள்ளிக்கிழமை
29 மார்ச் 2024

பங்குனி 16 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"உவையள் வாலை விட்டிட்டு நாலைப் பிடிக்கிறதாலதான் இன்னும் போதைப்பொருளை ஒழிக்கேலாமல் இருக்கு கண்டியளோ"



### வன உயிரிகள் திணைக்களத்தால்

# ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் ஏப்ரலில் விடுவிக்கப்படும்!

## வடக்கு ஆளுநர் உறுதிமொழி

**யாழ்ப்பாணம், மார்ச் 29**

**1985ஆம் ஆண்டுக்குப் பின்னர், வன உயிரிகள் திணைக் களத்தால் கையகப்படுத்தப்பட்ட காணிகளை ஏப்ரல் மாதத் துக்குள் விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரி வித்துள்ளார்.**

11

### அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள

## 7 ஆலயங்களில் வழிபட அனுமதி

யாழ்ப்பாணம், மார்ச் 29

அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் காணப்படும் 7 ஆலயங் கள் வழிபாடுகளுக்காக விடுவிக்கப்பட்டுள்ளன என்று வட மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார். யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் யாழ்ப் பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன் போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

11

### ஞானசார தேரருக்கு

## 4 ஆண்டுகள் சிறை

விரிவு:- பக்.03

## போதைப்பொருள் கடத்தலின் பெரும்புள்ளிகளைப் பிடியுங்கள்

### ஒருங்கிணைப்புக் குழுவில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 29

'யுக்திய' சுற்றிவளைப்புகளின்போது, போதைப்பொருள் கடத்தலின் பெரும் புள்ளிகளைக் கைதுசெய்ய நட வடிக்கை எடுக்கவேண்டும் என்று யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் நேற்றுச் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது.

11

### 'அரகலய' போராட்டத்தின்

## பின்னணியில் மதத்தலைவர்கள்!

### அமைச்சர் பிரசன்ன குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 29

'அரகலய' போராட்டத்தின்போது பெர முனவினரால் சொத்துகள் சேதமாக்கப்பட்டதன் பின்ன ணியில், மதத்தலை வர்களும் இருந்தனர் என்று நகர அபிவி ருத்தி வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரண துங்க தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரி

11

### வட்டுக்கோட்டை இளைஞன் கொலை;

## தொலைபேசி அறிக்கையைப் பெற பொலிஸுக்கு நீதிமன்றம் அனுமதி!

யாழ்ப்பாணம், மார்ச் 29

வட்டுக்கோட்டை இளைஞர் கொலை செய் யப்பட்டமை தொடர்பில் இறுதியாகக் கைது செய்யப்பட்ட மூவரின் தொலைபேசி அறிக் கையைப் பெற்றுக்கொள்வதற்காக, பொலி ஸாரால் விடுக்கப்பட்ட கோரிக்கை நீதிமன் றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. வட்டுக்கோட்டை இளைஞர் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டமை தொடர்பில் 6 பேர் கைது செய்யப்பட்ட நிலையில், கடந்த 24 ஆம் திகதி மேலும் 3 பேர் கைது செய் யப்பட்டனர். கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட 9 சந்தேகநபர்களும் மல்லா கம் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முற் படுத்தப்பட்டனர். இதன்போது, 8, 9 ஆம் சந்தேகநபர்களை எதிர்வரும்

11

## மரத்தால் வீழ்ந்த முதியவர் சாவு!

யாழ்ப்பாணம், மார்ச் 29

தென்னை மரத்திலி ருந்து கீழே வீழ்ந்த முதிய வர் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரி ழந்தார். பிலிப்பையா ஜோய் பீரிஸ் (வயது - 61) என்பவரே இவ்வாறு உயி ரிழந்தவராவார்.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த மேற்படி நபர், கடந்த 24 ஆம் திகதி வல் லிபுரம் பகுதியில் தேங் காய் பிடுங்கச் சென்றுள் ளார். காய்ந்த ஓலை யொன்றைப் பிடித்தபோது மரத்திலிருந்து தவறி கீழே வீழ்ந்

11

## விதை உ.கிழங்கில் பக்ரீறியா: அறிக்கை வழங்க உத்தரவு!

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்குக் கொண்டுவரப்பட்ட விதை உரு ளைக் கிழங்கில் பக்ரீறியாத் தொற்று இருந்தமை தொடர் பில் முழுமையான விசாரணை அறிக்கை சமர்ப்பிக்குமாறு மாகாண விவசாய அமைச்சின் செயலாளருக்கு யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு வின் இணைத்தலைவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் 20.75 மெற் றிக்தொன் விதை உருளைக்கி ழங்கு பக்ரீறியாத்

11

## யுவதியின் சடலம் வவு.வில் மீட்பு!

வவுனியா, மார்ச் 29

வவுனியா - சமணங்குளம் பகுதியில் யுவதியொருவர் தூக்கிலிருந்து நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தையிட்டி விகாரை விடயத்தை தவிர்க்கும் அமைச்சர் டக்ளஸ்!

## தமிழ் எம்.பி.க்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 29

**கடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தையிட்டி விகாரை தொடர்பில் தெரிவித்த கருத்துகள் கூட்ட அறிக்கையில் உள்ளடக்கப் படவில்லை. இது வேண்டுமென்றே மேற்கொள்ளப்படுகின்றது எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் குற்றஞ்சுமத்தினார்.**

"அது தவறுதலாகவே விடுபட்டுள்ளது. அடுத்த தடவை அது உள்வாங்கப்படும்" என மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் டக்ளஸ் தேவானந்தா பதிலளித்தார்.

இருப்பினும் நாடாளுமன்ற உறுப்பினர்களான செ. கஜேந்திரன் மற்றும் சி.சிறீதரன் ஆகியோர் ஒருமித்து எதிர்ப்பு வெளியிட்டனர். மக்களின் காணிகளை ஆக்கிரமித்துக் கட்டப்பட்ட விகாரை அகற்றப்படத்தான் வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் மீண்டும் நேற்றைய கூட்டத்திலும் வலியுறுத்தினார்.

அந்த விகாரை அகற்றப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை என ஒருங்கிணைப் புக் குழுவின் இணைத் தலைவர் டக்ளஸும் தெரிவித்தார். (ஒ-26)

# இலங்கைப் பிரஜை எனினும் இரண்டாம்தரப் பிரஜை இல்லை!

## அநுரவிடம் கூறிய சம்பந்தன்

கொழும்பு, மார்ச் 29

இலங்கைப் பிரஜை என்றபோதிலும் இலங்கையில் இரண்டாம்தரப் பிரஜைகளாக வாழ்வதற்கு தயாரில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் என்னிடம் கூறினார். அந்தக் கருத்து நியாயமானது என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்;

சம்பந்தன் நாடாளுமன்றத்தில் எனக்கு அருகில் தான் சில காலம் அமர்ந்திருந்தார். அவரின் சில அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பில் எமக்கு உடன்பாடு இல்லாமல் இருக்கலாம். ஆனால் ஒருநாள் எனது கைகளை பிடித்துக் கொண்டு சம்பந்தன் இவ்வாறு கூறினார்.

"அநுர நான் இலங்கைப் பிரஜை என உரத்தகுரலில் சர்வதேசத்திடம் கூறத் தயார். ஆனால் இலங்கையில் இரண்டாம்தரப் பிரஜையாக வாழத்தயாரில்லை" - என்றார். இது நியாயமானது.

அதேபோல ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே என்னிடம் ஒருநாள், "அநுர இந்த நாட்டில் என்னால் அமைச்சுப் பதவிக்கு மட்டுமே வரமுடியும். அந்த இடத்துக்கு வந்துவிட்டேன்" - எனக் கூறினார். தனது மொழி, மதம், இனத்தால் தன்னால் இந்நாட்டின் ஜனாதிபதியாக முடியாது என அவர் உணர்ந்திருந்ததால் அவ்வாறான தொரு நிலை ஏற்புடையது அல்ல. இனம், மத, மொழி, கலாசாரம் சுதந்திரம்போல அரசியல் சுதந்திரமும் உறுதிப்படுத்தப்படவேண்டும். இதை நாம் ஏற்கின்றோம் - என்றார். (எ-44)



# முட்டை இறக்குமதி வரையறை

கொழும்பு, மார்ச் 29

இந்தியாவிலிருந்து இறக்குமதிசெய்யப்படும் முட்டை போதியளவு கையிருப்பு இருப்பதால் இறக்குமதி வரையறுக்கப்பட்டுள்ளது. நாட்டில் சுமார் 4 முதல் 5 மில்லியன் முட்டைகள் கையிருப்பில் உள்ளன. நாள்தோறும் ஐந்து இலட்சம் முட்டைகள் சதொச நிறுவனங்கள் ஊடாக விநியோகிக்கப்படுகின்றன என்று அரச வணிகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்துள்ளார். (ச-இ)

# பதநீருக்கு மவுசு!

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ்ப்பாணம் முற்றவெளியில் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள 'தாலம்' பனம்பொருள் விற்பனை நிலையத்தில் அதிகளவானோர் பதநீர் கொள்வனவில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் இந்த விற்பனையகம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

தற்போதைய வறட்சியான கால நிலையையடுத்து பதநீர் நுகர்வு அங்கு உயர்ந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-17)

# நுரையீரலில் பல்

கொழும்பு, மார்ச் 29

நிமோனியா காய்ச்சலால் உயிரிழந்தவரின் நுரையீரலில் இருந்து பல் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பலாங்கொட, வலபொட பிரதேசத்தைச் சேர்ந்த 59 வயதான ஒருவர் நிமோனியாக் காய்ச்சலால் அண்மையில் உயிரிழந்தார்.

அவரது உடல், உடல் கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது, நுரையீரலில் பல் ஒன்று காணப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மருத்துவர்கள் உயிரிழந்தவரின் குடும்பத்தினரிடம் கேட்டபோது சில வருடங்களுக்கு முன்னர் அவரின் பல் ஒன்று காணாமற் போயிருந்தது என்று கூறியுள்ளனர். (எ-இ)



# மாணவிகளுக்கு வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 29

பாடசாலை மாணவிகளுக்கு சுகாதார அணையாடைகளை கொள்வனவு செய்வதற்கான வவுச்சர்கள் வழங்கப்படவுள்ளன என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் புத்தாண்டுக்குப் பின்னர் இந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த பெண் பிள்ளைகளைப் பலப்படுத்தும் வகையில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்காக அரசாங்கம் சுமார் ஒரு பில்லியன் ரூபாவைச் செலவிடுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



# எல்லைதாண்டிய 153 மீனவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 29

எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இந்த ஆண்டில் மாத்திரம் 153 இந்திய மீனவர்களும் 19 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

"153பேர் கைது செய்யப்பட்டிருந்தாலும் 118 பேருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். எஞ்சிய 35 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 10 பேரில் இருவருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை ஏற்கனவே விதிக்கப்பட்ட நிலையில் மீண்டும் இலங்கைக் கடல் எல்லைக்குள் வந்தமையாலும், எட்டுப் பேர் கடல் எல்லையைத் தெரிந்தே தாண்டியமையாலும் 6 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது" எனக் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (ஒ-26)

# விபத்து தொடர்பில் அவதானம் தேவை

## மருத்துவர்கள் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 28

புத்தாண்டு காலத்தில் வீடுகளில் ஏற்படும் விபத்துகள் மற்றும் வீதி விபத்துகள் தொடர்பில் அவதானமாகச் செயற்படவேண்டும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் புத்தாண்டு தினத்திலும் அதற்கு மறுநாளிலும் விபத்துகள் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்திருந்தன. சிறு குழந்தைகள் மற்றும் இளைஞர்களே அதிகம் விபத்துகளைச் சந்திக்கின்றனர் என்று மருத்துவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கணக்கெடுப்பு தரவுகளின்படி, பட்டாசுகளால் ஏற்படும் விபத்துகள் காரணமாக கை மற்றும் விரல்கள் பாதிக்கப்படுவதுடன், சுமார் 46 வீதமான விபத்துகளால் கண்கள், முகம் மற்றும் தலையில் பாதிப்பு ஏற்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# நீரில் மூழ்கி 4 சிறுவர்கள் சாவு!

கொழும்பு, மார்ச் 29

வலகம்புர மாஓயாவில் நீராடச் சென்ற நான்கு சிறுவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். கடந்த புதன்கிழமை ஐந்து சிறுவர்கள் ஒன்றாகச் சென்றபோதே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

நீரில் மூழ்கிய ஐவரில் ஒருவர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயக ரீதியில் தேர்தல்; அரசு உறுதி செய்யவேண்டும்

## சுயாதீன தேர்தல்களுக்கான ஆசிய வலையமைப்பு வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 29

**அனைத்துத் தரப்பினரையும் உள்வாங்கி, சர்வதேச தராதரங்களுக்கு ஏற்ப ஜனநாயக ரீதியிலான தேர்தல் நடைபெறுவதை இலங்கை அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டும்.**

-இவ்வாறு 'ஜனநாயகத் தேர்தலை' பாதுகாப்பதையும், மேம்படுத்துவதையும் இலக்காகக் கொண்டு பணியாற்றிவரும் சுயாதீனத் தேர்தல்களுக்கான ஆசிய வலையமைப்பு வலியுறுத்தியுள்ளது. இந்த ஆண்டு இலங்கையில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். இதன்போது தேர்தல் பிரசார செலவினங்களை ஒழுங்குபடுத்தல், வெறுப்புணர்வுப் பேச்சு மற்றும் போலித்தகவல் பரவலை முறியடித்தல், புலம்பெயர் தொழிலாளர்கள் வாக்களிப்பதற்கான உரிமையை உறுதிப்படுத்தல் என்பன குறித்து சுட்டிக்காட்டியிருந்தோம். இது அனைத்து வேட்பாளர்களும் சமமான நிலையிலிருந்து போட்டியிடுவதற்கு வாய்ப்பளிக்கும். அத்துடன் ஜனாதிபதித் தேர்தலை உரிய காலப்பகுதியில் நடத்துவதற்கு அவசியமான போதிய வளங்களை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இலங்கை அரசாங்கம் வழங்கவேண்டும் என்றும் அந்த அமைப்பு மேலும் குறிப்பிட்டுள்ளது.

(ச-6)

## அரசியல் உறுதிப்பாட்டுக்கு நாடாளுமன்றத் தேர்தல் தேவை நாமலும் வலியுறுத்து



கொழும்பு, மார்ச் 29

நாட்டில் அரசியல் உறுதிப்பாடு ஏற்படவேண்டுமெனில் முதலில் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் புதிய தேசிய அமைப்பாளரான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

மொட்டுக் கட்சியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டம் முடிவடைந்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என எழுப்பப்பட்ட கேள்விக்கு, 'முதலில் பொதுத்தேர்தல் நடந்தால் இந்தக் கேள்வி எழாது.' என நாமல் பதிலளித்தார். ஜனாதிபதி வேட்பாளர் பதவி வழங்கப்பட்டால் ஏற்பீர்களா என்ற கேள்விக்கு, 'ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் கட்சியின் நிறைவேற்றுக்குழு மற்றும் அரசியல் குழுவே முடிவுஎடுக்க வேண்டும். கட்சி எடுக்கும் எந்தவொரு முடிவையும் ஏற்க தயார்.' - என்று பதிலளித்தார் நாமல். (ஒ-44)

## கெஹலிய கைது; மகள் முறைப்பாடு

கொழும்பு, மார்ச் 29

கெஹலிய ரம்புக்வெல தன்னிச்சையாக கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவித்து அவரது மகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு செய்துள்ளார்.

தனது தந்தை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தன்னிச்சையாகக் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை நடத்தவேண்டும் என்று முறைப்பாட்டில் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## தேர்தல் பரப்புரையில் சாகல ஈடுபட முடியுமா?

ஜனாதிபதியின் ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழுப்பிரதானியுமான சாகல ரத்நாயக்கா தேர்தல் பரப்புரையில் ஈடுபட முடியுமா என ஊடகவியலாளர் லசந்த ருகுணுகே தேர்தல்கள் ஆணையாளரிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த 23ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளரிடம் கடிதம் அனுப்பியதாகவும் இதுவரை பதில் கிடைக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைச் சட்டப்படி பொதுச்சேவை உத்தியோகத்தர் ஒருவர் அரசியல் பணிகளில் ஈடுபட முடியாது. இவ்வாறிருக்கையில் இம்மாதம் 10 ஆம் திகதி குளியாப்பிட்டியில் நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் ஊர்வலத்தில் சாகல ரத்நாயக்கா பங்கேற்று உரையாற்றியுள்ளார் என்பதையும்தனது கடிதத்தில்குறிப்பிட்டுள்ளதாக லசந்த தெரிவித்துள்ளார். (ஒ-6)

## சுகாதாரப் பரிசோதகர்கள் நாடு முழுவதும் வேட்டை

கொழும்பு, மார்ச் 29

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு வர்த்தக நிலையங்களை பரிசோதிப்பதற்காக நாடளாவிய ரீதியில் 3 ஆயிரம் சுகாதாரப் பரிசோதகர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று அந்தச் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார். உணவு தயாரிக்கும் நிலையங்களில் உணவு தயாரிக்கும் நபர்கள் மருத்துவ அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வது கட்டாயம் என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

# ஞானசார தேரருக்கு 4 ஆண்டுகள் சிறை

பொதுபலசேனவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசாரதேரருக்கு நான்கு வருட கடூழியச் சிறைத்தண்டனையை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது கொழும்பு மேல் நீதிமன்றம். இஸ்லாம் மதத்தை இழிவுபடுத்தும் வகையில் 2016ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்டமை மற்றும் இலங்கையில் மத மற்றும் இன ஒற்றுமையைச்சீர்குலைத்த குற்றச்சாட்டின் பேரில் சட்டமா அதிபர் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு விசாரணைக்கு நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டபோதே ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் 2 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் ஒரு இலட்சம் ரூபா அபராதமும் விதித்து மேல் நீதிமன்றின் நீதிபதி ஆதித்திய பட்டபெண்டிகே தீர்ப்பளித்தார். (ச-இ)

## புதினம் தெரியுமோ?

ஆத்தில போட்டாலும் அளந்து போடவேனும். பிச்சை போடேக்கையும் அது சரியான ஆளுக்குத்தான் போடுறமோ எண்டு தெரிஞ்சு போடவேனும். இல்லாட்டி சிலரின்ர சொகுசு வாழ்க்கைக்காக நாங்கள் காசுகுடுத்துக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கிறதாப் போடும். யாழ்ப்பாணம் ரவுனுக்கு கிட்டவுள்ள கோயில் ஒண்டில கனகாலமாப் பிச்சையெடுக்கிற ஒருத்தர் இருக்கிறார். ஒவ்வொருநாளும் மத்தியானநேரத்தில ஒராள் அவரிட்ட வருவார். வாறவரிட்ட இந்தப் பிச்சையெடுக்கிற ஆள் தன்னட்ட இருக்கிற காசை குடுப்பார். அவரும் காசை எண்ணி வாங்கிக் கொண்டு வெளிக்கிடுவார். கொஞ்சநேரத்தில காசை வாங்கிக்கொண்டு போனவர் கையில ஒரு கடுதாசிப்பையோட அங்க வருவார். ஆக்கள் நிக்கினமோ எண்டு நோட்டம் விட்டிட்டு, பிச்சையெடுக்கிறவரிட்ட அந்தக் கடுதாசிப் பையைக் குடுத்திட்டு பறந்திடுவார். பிறகு கடுதாசிப் பையைத் திறந்து அதுக்க இருக்கிற போத்தில வாய்க்கை வைக்கிறதும், பிச்சை எடுக்கிறதுமா அவர் இருப்பார். செம்மனச் செல்வியிட்டை புட்டுவாங்கிச் சாப்பிட்டுப் போட்டு சிவபெருமான் ஆடிப்பாடிப் போட்டு, அணையைக் கட்டாமல் நித்திரை கொண்ட மாதிரி, போத்திலில இருக்கிறதைக் குடிச்சு முடிச்சிட்டு, பிச்சையெடுக்கிறவர் அப்பிடியே சரிஞ்சு படுத்திடுவார்.

பிறகு அடுத்தநாள்தான் பிச்சையெடுக்கத் தொடங்குவார். இப்பிடியே போகுது அவரின்ர பொழுது.

அவருக்குக் குடிக்காட்டி கை, காலெல்லாம் நடுங்கும். பாவம், மனிசன் . அதுக்காகத்தான் ஒவ்வொரு நாளும் நான் வாங்கிக் குடுக்கிறனான் எண்டு அவருக்கு 'பொருள்'வாங்கிக் குடுக்கிறவர் சொல்லுறார். இப்பிடி 'பொருளை' வாங்கிக் குடுக்கிறவருக்கும் புறிம்பாக் கொஞ்சக்காசு குடுபடுகுது. இல்லாட்டி ஒவ்வொருநாளும் இந்த வெயிலுக்க போய், 'பொருள்' வாங்கியந்து குடுப்பாரோ? அவருக்கும் ஏதோ பொசிப்பிருக்குது, அதாலதான் உந்த 'இறக்குமதி 'யாவாரத்தில இறங்கியிருக்கிறார்.

இப்பிடி அவையள் குடிச்சு வெறிக்கிறதுக்குத்தான் நாங்கள் காசைப் போட்டுக்கொண்டு இருக்கிறம். இந்தாள் மட்டுமில்லை யாழ்ப்பாணம் பஸ்ஸ்ராண்டில பிச்சை எடுக்கிற சிலரும் குடிக்கிறதுக்காகவே பிச்சையெடுக்கினம்.அதில ரண்டு மூண்டு பேர் பொம்பிளையள். பஸ்ஸூக்க அவையள் ஏறிப் பிச்சை கேக்க வரேக்கையே நல்ல 'கணகணப்பாத்தான்' வருவினம். 'பக்' கெண்டு சாராயமணம் மூக்கில அடிக்கும். அதால கையில காசு எடுக்கிறதுக்குப் பதிலாக எல்லாரும் மணத்தில இருந்து தப்ப மூக்கைத் தான் பொத்தவேண்டியிருக்கும். இப்பிடிப் பட்டவையால உண்மையா வாழுறதுக்கு வேற வழியொண்டுமில்லாமல் பிச்சையெடுக்கிறவையையும் பிழையாவெல்லோ நினைக்கவேண்டியிருக்கு.

கடைசியா ஒரு கொசுறுத்தகவல். யாழ்ப்பாணத்தில உள்ள பேமஸான கோயில் ஒண்டில முந்தி ஒருத்தர் பிச்சை எடுத்தவர். அவர் ஒவ்வொருநாளும் தான் பிச்சையெடுத்த காசை பக்கத்தில உள்ள கடை முதலாளியிட்டக் குடுத்து வைப்பார். இப்பிடி 20 லட்சத்துக்கும் மேல சேர்த்திட்டார். ஆனால் அதை அனுபவிக்காமலே அந்தப் பிச்சையெடுக்கிறவர் செத்திட்டார். பிறகு கடை முதலாளிதான் அவருக்குச்செத்தவீடெல்லாம் வடிவாச் செய்தவர். இப்பிடியும் சில பிச்சைக்காரர் இருந்திருக்கினம் கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலை நடத்தாவிட்டால் ஜனாதிபதி விரட்டப்படுவார்

## கனடாவில் அநுர முழக்கம்

கொழும்பு, மார்ச் 29

ஜனாதிபதித் தேர்தலை ரணில் விக்கிரமசிங்க நடத்துவாரா என சிலர் கேள்வி எழுப்பிக்கொண்டிருக்கின்றனர். அவ்வாறு ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படாவிட்டால்தேர்தலுக்கு முன்னதாகவே ரணில் வீட்டுக்கு அனுப்பப்படுவார் என்று ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கனடாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அநுர கடந்த புதன்கிழமை றொறன்ரோவில் வசிக்கும் ஜே.வி.பி.யின் ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றினார் இதன்போதே அநுரகுமார இவ்வாறு தெரிவித்தார். அநுர மேலும் தெரிவித்ததாவது:

'எமது நாடு தற்போதைய நிலையில் இருந்து மீள வேண்டுமெனில் அரசியல் மாற்றம் அவசியம். அதனைச் செய்வதற்கு இவ்வருடம் சிறந்த காலப்பகுதியாகும். செப்ரெம்பர் 17 மற்றும் ஒக்ரோபர் 17க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும். பெரும்பாலும்செப்ரெம்பர்மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதிக்குள் தேர்தல் நடத்தப்பட சாத்தியங்கள் உள்ளன.


மாகாணசபைத் தேர்தல் ஐந்து வருடங்களாக நடக்கவில்லை, உள்ளூராட்சித் தேர்தலும் ஓராண்டு இழுத்தடிக்கப்பட்டுள்ளது. தேர்தலின்போது பாடம் புகட்டுவதற்காக மக்கள் மௌனமாகக் காத்துக்கொண்டிருக்கின்றனர்-என்றார். (ம-44)

# கருக்கலைப்புச் சட்டத்துக்கு மதத்தலைவர்கள் எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 29

மதத்தலைவர்களின் எதிர்ப்பின் காரணமாக கருக்கலைப்பை சட்டபூர்வமாக்க முடியாதுள்ளது என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

"கருக்கலைப்பைச் சட்டபூர்வமாக்க 2015 ஆம் ஆண்டு நான் நீதியமைச்சராக இருந்தபோது முயற்சித்தேன். குறிப்பாக பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங்களால் உண்டாகும் கர்ப்பங்கள் காரணமாக மருத்துவ, சட்டத்துறை நிபுணர்களும் இதனைப் பரிந்துரைத்தனர். ஆனால் மதத்தலைவர்களின் எதிர்ப்பின் காரணமாக கருக்கலைப்புச் சட்டத்தை மீளப்பெற வேண்டிய நிலை ஏற்பட்டது" என்றும் அவர் தெரிவித்தார். (ச-6)



# மிதக்கும் சந்தைக்கு ஜப்பானால் புத்துயிர்

கொழும்பு, மார்ச் 29

புறக்கோட்டை மிதக்கும் சந்தையை மீண்டும் புத்துயிர் பெறச் செய்வதற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு ஜப்பான் முதலீட்டாளர் ஒருவர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டுள்ளார்.

பத்தரமுல்ல நகர அபிவிருத்தி அதிகாரசபையில் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் நிமேஷ் ஹேரத் தலைமையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

அதன்படி, புறக்கோட்டை மிதக்கும் சந்தையின் முகாமைத்துவம் மற்றும் செயற்பாடுகள் ஜப்பானிய முதலீட்டின் மூலம் மேற்கொள்ளப்படும்.

அதற்கமைய மிதக்கும் சந்தை வளாகம் ஜப்பானிய நகரமாகவும் மிதக்கும் சந்தையாகவும் உருவாக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# வொஷிங்டன் - கொழும்பு சகோதரத்துவ நகரங்கள்!

## மஹிந்த சமரசிங்கவின் விருப்பம் இது

அமெரிக்காவின் தலைநகர் வொஷிங்டனை இலங்கைத் தலைநகர் கொழும்பின் சகோதர நகரமாக இணைக்கவேண்டுமென அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் மஹிந்த சமரசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வொஷிங்டன் மாநகர முதல்வர் மொறீல் பௌஸரை அண்மையில் சந்தித்தபோதே மஹிந்த சமரசிங்க இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். (ம-6)

# பிரிந்தோரை இணைத்து பெரமுனவை பலப்படுத்துக

## மஹிந்தவுக்கு எஸ்.பி. வலியுறுத்து



பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியில் இருந்து வெளியேறியுள்ள டலஸ் அழகப்பெரும, உதய கம்மன்பில, விமல் வீரவன்ஸ ஆகியோரை மீண்டும் இணைத்துக் கொள்வதற்கான பேச்சுகளை மஹிந்த ராஜபக்ச உடன டியாக ஆரம்பிக்கவேண்டும் என்று பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் எஸ்.பி. திஸாநாயக்க மேலும் தெரிவித்ததாவது:-

'விமல், உதய கம்மன்பில, டலஸ் போன்றவர்கள் ஒன்று ஐக்கிய மக்கள் சக்தியில் இணையவேண்டும். இல்லையேல் எமது பக்கம் வர வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அவர்களால் நாடாளுமன்றம் வரமுடியாது.

மேற்படி தரப்புகளை எமது கட்சி இணைத் துக்கொள்ளவேண்டும் என்பது மிக முக்கியம். அதற்கான வேண்டுகோளை நான் விடுத்துள்ளேன். பேச்சு ஆரம்பமாகும் என நம்புகின்றேன். இவர்களை இணைப்பதற்கான பேச்சை கட்சித் தலைவர் என்ற ரீதியில் மஹிந்த ராஜபக்ச உடனடியாக ஆரம்பிக்கவேண்டும்' - என்றார் (ம-44)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளைத் தொடங்கவும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உண்டு. திடீர் செலவுகளும் ஏற்படும். நண்பர்கள் அனுசரணையாக இருப்பார்கள்.

**இடபம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். அனுகூலம் உண்டாகும். முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். தொல்லைகள் நீங்கும். முருகப் பெருமானை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**மிதுனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் இடையூறுகளும் நீங்கும். பாதிப்பு எதுவும் இருக்காது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். குடும்பத்தில் சிறுசிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும். தேவையற்ற செலவுகள் ஏற்படும். பணிச்சுமை அதிகரிக்கும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். காரியம் அனுகூலமாகும். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். இன்று தட்சிணாமூர்த்தி வழிபாடு நன்மை தரும்.

**கன்னி:** தேவையான பணம் இருக்கும். செலவுகளைச் சமாளித்துவிடுவீர்கள். மனக் கசப்புகள் நீங்கும். சுபச்செலவு ஏற்படும். சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. மகாலட்சுமி வழிபாடு மனமகிழ்ச்சி தரும்.

**துலாம்:** அனுகூலமான நாளாக இருக்கும். காரியம் அனுகூலமாக முடியும். பணஉதவி கிடைக்கும். வீண் விவாதம் செய்வதைத் தவிர்ப்பது அவசியம். உங்கள் முயற்சிக்கு ஒத்துழைப்பு கிடைக்கும்.

**விருச்சிகம் :** மனதுக்கு மகிழ்ச்சி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. காரியம் அனுகூலமாக முடியும். கணவன் –மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். ஆதாயம் கிடைக்கும்.

**தனுசு:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். வாழ்க்கைத்துணையின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சுறுசுறுப்பு ஏற்படும்.

**மகரம்:** ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முயற்சிகள் சாதகமாக முடியும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்ய வேண்டாம்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபட வேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்கு குடும்பம் தொடர்பான பணிகளுக்காக சற்று அலைச்சல் ஏற்படும். சிலருக்கு எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மீனம்:** மன உறுதியுடன் செயற்படுவீர்கள். செலவுகள் அதிகரிக்க வாய்ப்புள்ளது. கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். தடைகள் விலகும்.

# சகோதரர்களின் போர்

லைக்கா ஞானம் அறக்கட்டளையின் பிரதான அனுசரணையில் ருகுணு பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான துடுப்பாட்டப் போட்டி, ருகுணு பல்கலைக்கழக மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமையும், நாளை சனிக்கிழமையும் இடம்பெறவுள்ளது.

சகோதரர்களின் போர் எனப் பெயரிடப்பட்டுள்ள துடுப்பாட்டப் போட்டியில் 40 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட போட்டி முதல் நாளில் நடைபெறவுள்ளது. தொடர்ச்சியாக 2 ஆவது தினத்தில் பல்கலைக்கழக ஊழியர்களுக்கான நட்பு ரீதியான போட்டியும், பல்கலைக்கழக மாணவிகள் பங்கெடுக்கும் மகளிர் துடுப்பாட்டப் போட்டியும், 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இரு பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்த அணியுடனான போட்டியும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# வீழும் சனத்தொகை

சுதந்திரத்தின் பின்னரான வரலாற்றில் முதற் தடவையாக சனத்தொகை வீழ்ச்சியைச் சந்தித்திருக்கின்றது இலங்கை. கடந்த ஆண்டின் ஜூன் மாதத்துடன் முடிவடைந்த ஓராண்டு காலப்பகுதியில் சனத்தொகையில் 14 லட்சத்துக்கும் அதிகமான தொகை குறைந்திருக்கின்றது என்று இலங்கைப் பதிவாளர் திணைக்களத்தின் புள்ளிவிவரங்கள் சொல்லி நிற்கின்றன. சனத்தொகை வீழ்ச்சிக்கு இலங்கையின் பொருளாதார நிலைமையால் ஏற்பட்ட புலம்பெயர்வே பெரும் காரணம் என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இலங்கையில் இருந்து தற்போதும் பெரும் திரளானோர் பிற நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து கொண்டிருக்கும் நிலையில், இந்த சனத்தொகை வீழ்ச்சித் தரவுகள் இப்போது அதிகரித்திருக்கக்கூடும். நாட்டின் எதிர்காலத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் இந்தச் சனத்தொகை வீழ்ச்சித் தகவல்களை சாதாரணமாகக் கடந்துவிட முடியாது.

இலங்கையின் உள்நாட்டுப் போரால் இலங்கைத் தமிழர் களே பெருமளவில் பிறநாடுகளுக்குப் புலம்பெயர்ந்திருந்தனர். 1987 ஆம் ஆண்டுமுதல் 1989 ஆம் ஆண்டுவரையில் இலங்கையின் தென்பகுதியில் ஏற்பட்ட அரசியல் வன்முறைகளால் குறைந்தளவிலான சிங்களமக்கள் தான் புலம்பெயர்ந்திருந்தனர். உள்நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலைகளால் வாழமுடியாத இனக் குழுமங்கள் புலம்பெயர்ந்த கடந்தகால நிலைமையை விடவும் தற்போதைய நிலைமை வேறுபட்டதாக இருக்கின்றது. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் ஒட்டுமொத்த இலங்கையர்களுமே புலம்பெயர்ந்து பிறநாடுகளுக்குச் செல்ல முயற்சிக்கும் தற்போதைய நிலைமை மிகவும் அபாயகரமானது.

பொருளாதார நெருக்கடி மக்கள் மத்தியில் உணவுப் பாதுகாப்புக் கரிசனையை இல்லாமல் செய்திருக்கின்றது. ஒரு குடும்பம் தம்முடைய வருமானத்தில் 75 வீதத்தை உணவுக்காகச் செலவிடுகின்றது. அதைத் தாக்குப்பிடிக்க முடியாது இலங்கை மக்கள் உணவு, மருத்துவம் மற்றும் கல்விக்கான செலவைக் குறைத்து வருகின்றனர் என்பது அண்மைய ஆய்வுகளில் அறியப்பட்டிருக்கின்றது. புலம்பெயர்வு தொடர்பான தீர்மானம் ஒரு தனிநபர் தீர்மானமாக இருப்பதல்ல. தங்களது குடும்பம் தொடர்பாக எடுக்கப்படும் சமூகத் தீர்மானமாகும். இலங்கையின் தற்போதைய நெருக்கடி நிலைமை பலரை வெளிநாடுகள் நோக்கி உந்தித் தள்ளுகின்றது. மூளைசாலிகளின் வெளியேற்றமும், தொழிற்படையின் வெளியேறலும் நாட்டின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. இலங்கையைப் பொறுத்தவரையில் மூளைசாலிகளின் வெளியேற்றத்தின் தாக்கம் உடனடியாகவே வெளிப்பட ஆரம்பித்திருக்கின்றது. மருத்துவமனைகளில் மருத்துவர்கள் பற்றாக்குறை, நிபுணத்துவம் வாய்ந்தோரின்மை போன்ற பிரச்சினைகள் எழ ஆரம்பித்திருக்கின்றன. இது உற்பத்தித் துறையினதும், சேவைகள் துறையினதும் திறனைக் குறைத்துவிடும். பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டெழும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நாட்டுக்கு இது மிகப் பெரும் தலையிடியாகவே இருக்கும்.

நாட்டிலிருந்து மனித மூலதன வெளியேற்றம் அதிகரித்துள்ள நிலையில், அரசாங்கம் அதைத் தடுப்பதற்குரிய எந்தவிதமான காத்திரமான நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதாக இல்லை. தொலைநோக்கற்ற தீர்மானங்களால் ஏற்பட்டுள்ள கட்டமைப்பு ரீதியிலான சிக்கலைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் எந்தத் திட்டத்தையும் முன்னெடுக்கவில்லை. மூளைசாலிகள் மற்றும் தொழிற்படையின் வெளியேற்றம் தொடருமானால், உற்பத்தித் துறையில் ஏற்படும் தாக்கம் நாட்டை இன்னமும் வருடக்கணக்கில் பின்நோக்கியே தள்ளும். கண்துடைப்பு வேலைகள் ஊடாக நாட்டை மீட்க முடியாது என்பதை உணர்ந்து ஆட்சியாளர்கள் காரியத்தில் இறங்க வேண்டும். இல்லாவிட்டால் இன்னும் சில ஆண்டுகளில் இலங்கை பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்வதைத் தவிர்க்க முடியாது.




# சனத்தொகை வீழ்ச்சி

**கொழும்பு, மார்ச் 29**

**சுதந்திரத்துக்குப் பின்னரான வரலாற்றில் முதல் தடவையாக இலங்கையில் சனத்தொகையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது என்று இலங்கை பதிவாளர் திணைக்களத்தின் புள்ளி விவரங்கள் தெரிவித்துள்ளன.**

2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதியுடன் முடிவடைந்த ஓராண்டு காலப்பகுதியில் சனத்தொகையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது. இந்தக் காலப் பகுதியில் 14 இலட்சத்து 4 ஆயிரத்து 395 ஆல் சனத்தொகை குறைவடைந்துள்ளது. பொருளாதார நெருக்கடி நிலைமைகளால் நாட்டை விட்டு வெளியேறுவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன், பிறப்பு வீதமும் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## ரூபாவின் பெறுமதியை உயர்த்துவதே இலக்கு!



கொழும்பு, மார்ச் 29

எதிர்வரும் ஜூன் மாதத்தில் டொலரின் பெறுமதியை 280 ரூபாவாகக் குறைப்பதே ஜனாதிபதியின் இலக்கு என்று மத்தியவங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். சந்தை நிலைவரத்துக்கேற்ப டொலரின் பெறுமதியில் மாற்றம் ஏற்படும்.

இதுவரை டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதியில் 6.7 வீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதனை 12.1 வீதமாக அதிகரிப்பதே ஜனாதிபதியின் இலக்கு. அதனூடாகப் பொருள்களின் விலை குறைவடையும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

## அதிக செலவு கொழும்பு முதலிடத்தில்!

இலங்கையிலுள்ள 25 மாவட்டங்களில் அதிக செலவைக் கொண்ட மாவட்டமாக கொழும்பும் குறைந்த செலவைக் கொண்ட மாவட்டமாக மொனராகலையும் காணப்படுகின்றன.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் வறுமைக்கோடு தொடர்பாக வெளியிட்ட புதிய அட்டவணையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

## யாசகம் பெறும் சிறுவர் அதிகரிப்பு

நாடு முழுவதும் யாசகம் செய்யும் சிறுவர்களின் எண்ணிக்கை 20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் வரை பதிவாகியுள்ளது. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புள்ளி விவரவியல் மற்றும் தரவுக் கற்கைப் பிரிவு மேற்கொண்ட ஆய்வில் இந்த விடயம் தெரியவந்துள்ளது. நாட்டில் ஏற்பட்ட கொரோனாத் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. சிறுவர்களைக் கொண்டு யாசகம் செய்வது சட்டப்படி குற்றமாகும் என்றும் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## 1,700 வேண்டும்

கொழும்பு, மார்ச் 29

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 33 சதவீத சம்பள உயர்வை வழங்குவதற்கே பெருந்தோட்டக் கம்பனிகள் முன்வந்துள்ளன. இதனை ஏற்க முடியாது. ஆயிரத்து 700 ரூபாவையே கோரினோம். அந்தத் தொகையில் உறுதியாக நிற்கின்றோம்.

-இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான், தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் வலியுறுத்தினார்.

நாட்கூலி முறைமை பொருத்தமற்றது.

எனவே, நிரந்தரமான தொரு தீர்வை நோக்கி நகரவேண்டும். அந்த நிரந்தரத் தீர்வை அடையும்வரை ஆயிரம் ரூபாவிலேயே இருக்கமுடியாது. அதனால்தான் 1,700 ரூபா கோருகின்றோம். -என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

**நாளை**

**30.03.2024**

**சனிக்கிழமை**

**பங்குனி–17**

சுபநேரம் : 03.12 –04.42

ராகுகாலம் : 09.12 – 10.42

**நாளொரு நல்வார்த்தை**

**தயங்குகிறவர் கை தட்டுகிறார்,**
**துணிந்தவர் கை தட்டல்**
**பெறுகிறார்.**

**–பிடல் காஸ்ட்ரோ–**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வருடத்துக்குள் உயர்கல்வி ஆ.குழு!



கொழும்பு, மார்ச் 29

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குப் பதிலாக தேசிய உயர்கல்வி அபிவிருத்தி ஆணைக்குழுவை இவ்வருடத்துக்குள் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்குப் பதிலாக தேசிய உயர்கல்வி அபிவிருத்தி ஆணைக்குழுவை அமைப்பது தொடர்பாக முன்னாள் பிரதம நீதியரசர் கே.ஶ்ரீபவன் தலைமையிலான குழுவின் அவதானிப்புகள் அடங்கிய அறிக்கை அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையை ஆராய்ந்த பின்னர் தேசிய உயர்கல்வி அபிவிருத்தி ஆணைக் குழுவை இவ்வருடத்தில் நிறுவமுடியும்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட சில சிக்கல்களால் சில பல்கலைக்கழகங்களின் இறுதியாண்டு மாணவர்கள் சரியான நேரத்தில் கற்கையைப் பூர்த்தி செய்ய முடியாமல் உள்ளனர். இந்தச் சிக்கல்களைத் தீர்க்க சில மாற்று வழிகளை மேற்கொள்ளவுள்ளோம் - என்றார். (ச-இ)

# டிஜிற்றல் சட்டங்கள் விரைவில்!

*ஜனாதிபதி ரணில் உறுதி*

கொழும்பு, மார்ச் 29

டிஜிற்றல் பரிவர்த்தனைக்கான முகவர் நிலையம் மற்றும் செயற்கை நுண்ணறிவுக்கான மையம் ஆகியவற்றை உருவாக்குவதற்கான சட்டங்கள் இந்த வருட நடுப்பகுதிக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

புதிய சட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இலங்கையின் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட டிஜிற்றல் பொருளாதாரத்தை வளர்க்கமுடியும். விவசாயத்தை நவீனமயமாக்குவது, வறுமையை நிவர்த்தி செய்வது மற்றும் கல்வி முறையை சீர்திருத்துவது போன்றவற்றில் டிஜிற்றல் பொது உள்கட்டமைப்பு வசதிகள் செலுத்தப்பட்டுள்ளன.

2035ஆம் ஆண்டளவில் இலங்கை மக்களில் வறுமை 10 வீதத்தைத் தாண்டாது என்பதை உறுதிப்படுத்துவது எமது நோக்கமாகும். இந்தத் திட்டங்களைச் செயற்படுத்த கூட்டு ஒத்துழைப்பு அவசியம் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

# குருபூசையும் சொற்பொழிவும்

தெல்லிப்பழை, மார்ச் 29

சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகச் சிவஶ்ரீ பால.திருகுணானந்தக்குருக்கள் நடத்தும் வாராந்தப் பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவு, சேக்கிழார் பெருமானின் குருபூசை என்பன தெல்லிப்பழை அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலய பிரதான மண்டபத்தில் எதிர்வரும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன.

சிவநெறிப் பிரகாசர் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா.தனபாலன் கலந்துசிறப்பிக்கவுள்ளார்.

சேக்கிழார் பெருமானின் குருபூசையைத் தொடர்ந்து, 'பெரிய புராணம் காட்டும் பக்தி' என்னும் விடயப்பொருளில் சைவப்புலவர் க.கலைநாதனின் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (ப)



சர்வதேச பூச்சிய கழிவு தினத்தை முன்னிட்டு மாந்தை கிழக்கில், மாந்தை கிழக்குப் பிரதேசசபைச் செயலாளர் திருமதி பா.சிவதர்சினி தலைமையில் பல்வேறுபட்ட நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. கழிவுப்பொருள்களை தரம் பிரித்து அகற்றுதல், மீள்சுழற்சிக்குட்படுத்தல் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. (ப-13)



# தேர்தலை நடத்தாவிட்டால் ஜனாதிபதி விரட்டப்படுவார்

*கனடாவில் அநுர முழக்கம்*

ஜனாதிபதித் தேர்தலை ரணில் விக்கிரமசிங்க நடத்துவாரா என சிலர் கேள்வி எழுப்பிக்கொண்டிருக்கின்றனர். அவ்வாறு ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படாவிட்டால் தேர்தலுக்கு முன்னதாகவே ரணில் வீட்டுக்கு அனுப்பப்படுவார் என்று ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கனடாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அநுர கடந்த புதன்கிழமை றொறன்ரோவில் வசிக்கும் ஜே.வி.பி.யின் ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றினார் இதன்போதே அநுரகுமார இவ்வாறு தெரிவித்தார். அநுர மேலும் தெரிவித்ததாவது:

'எமது நாடு தற்போதைய நிலையில் இருந்து மீள வேண்டுமெனில் அரசியல் மாற்றம் அவசியம். அதனைச் செய்வதற்கு இவ்வருடம் சிறந்த காலப்பகுதியாகும். செப்ரெம்பர் 17 மற்றும் ஒக்ரோபர் 17க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும். பெரும்பாலும் செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதிக்குள் தேர்தல் நடத்தப்பட சாத்தியங்கள் உள்ளன.

மாகாணசபைத் தேர்தல் ஐந்து வருடங்களாக நடக்கவில்லை, உள்ளூராட்சித் தேர்தலும் ஓராண்டு இழுத்தடிக்கப்பட்டுள்ளது, தேர்தலின்போது பாடம் புகட்டுவதற்காக மக்கள் மௌனமாகக் காத்துக்கொண்டிருக்கின்றனர்-என்றார். (ம-44)




# விளையாட்டு வீரர்களுக்கு விமானப்படை கௌரவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 29

விமானப்படையைச் சேர்ந்த சிறந்த விளையாட்டு வீரர்களைக் கௌரவித்து விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் இலங்கை விமானப்படைத் தளபதியும் விமானப் படை விளையாட்டுச் சம்மேளனத் தலைவருமான எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ச பங்கேற்று விருதுகளை வழங்கிவைத்தார். இதன்போது தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு நிகழ்வுகளில் சிறந்த செயற்றிறனை வெளிப்படுத்திய விமானப்படையின் விளையாட்டு வீர,வீராங்கனைகள் கௌரவிக்கப்பட்டனர். (ச)



# கடன் மறுசீரமைப்பு தோற்றால் நாட்டை நிர்வகிக்க முடியாது!

*அமைச்சர் பந்துல தெரிவிப்பு*

கொழும்பு, மார்ச் 29

வெளிநாட்டு அரச கடன் மறுசீரமைப்பு முயற்சி தோல்வியடைந்தால் எந்த அரசாங்கத்தாலும் நாட்டை நிர்வகிக்க முடியாது. இந்த உண்மையை நாட்டு மக்கள் விளங்கிக்கொள்ளவேண்டும்.

- இவ்வாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி மற்றும் ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடன்களை மீளச் செலுத்தமுடியாது என்று அறிவிக்கப்பட்டவுடன் அபிவிருத்திப் பணிகளுக்கு நிதியுதவி வழங்கிய நிறுவனங்கள் கடன் வழங்கலை நிறுத்தின.

அரச முறைக் கடன்களை மறுசீரமைப்பதற்குரிய பேச்சு கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இடைநிறுத்தப்பட்ட அபிவிருத்திப் பணிகளை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு வெற்றி பெற்றால் மட்டுமே அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கமுடியும். பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் குறுகிய அரசியல் நோக்கத்துடன் செயற்படுவதை அரசியல் தரப்பினர் தவிர்க்கவேண்டும் என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணம் கோயில் வீதியில் உள்ள வீட்டில் காலை 6 மணிதொடக்கம் மதியம் 1.00 மணிவரை வீட்டு வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. சம்பளம் 40.000/- வரை வழங்கப்படும். வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக்கூடியவர்களும் தொடர்புகொள்ளலாம். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 759 4825
077 773 8715

## வீடு வாடகைக்கு

**அம்மன் வீதி, கந்தர்மடத்தில்**
நவீனமுறையில் திருத்தி அமைக்கப்பட்ட நான்கு அறைகளுடன் இணைந்த குளியலறையுடன், இரண்டு வரவேற்பு அறை, சமையலறை மற்றும் வாகன தரிப்பிட வசதிகளுடன்
**வீடு வாடகைக்கு உண்டு.**

(CS/28358) J-1

தொடர்பு:- 076 177 6155


# பருத்தித்துறையில் நாளை இலவச கண் பரிசோதனை

யாழ்ப்பாணம், மார்ச் 29

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் நாளை சனிக்கிழமை இலவச கண்பரிசோதனை முகாமொன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்வதை பிரதான நோக்காகக் கொண்டு நடத்தப்படும் இந்தக் கண் பரிசோதனை முகாம், காலை 8 மணி தொடக்கம் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் இடம்பெறவுள்ளது.

இதில் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கான கண்புரை சத்திரசிகிச்சை யாழ். போதனா மருத்துவமனையில் முற்றிலும் இலவசமாகச் செய்யப்படும்.

எனவே கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள நோயாளர்கள் மேற்படி கண்பரிசோதனை முகாமில் கலந்துகொண்டு தங்கள் பெயர்களைப் பதிவுசெய்யுமாறு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ம-100)

# கௌரவிப்பு நிகழ்வு

வடலியடைப்பு இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் நூறு புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு என்பன இந்து இளைஞர் மன்ற மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்து இளைஞர் மன்றத் தலைவர் க.துவாரகன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ப-66)

# பொதுக்கூட்டம்

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய திருவிழா கால தண்ணீர்ப்பந்தல் சபை (தும்பசிட்டி பருத்தித்துறை) பொதுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சாளம்பை முதலியம்மன் கோயிலில் நடைபெற உள்ளது. (ம-100)


## விற்பனைக்கு

**தோட்டங்கள், விவசாய நிலங்கள் வீட்டுத்தோட்டங்களுக்கு**
தேவையான **வன்னி** எரு வாகனங்கள் மூலம் தேவையான இடங்களில் விநியோகிக்கப்படும். ( 1 Bag 600/=)

(CS/54560) J-1

தொடர்பு:- 077 885 7406


## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.

## ஆட்டிறைச்சி மற்றும் மாட்டிறைச்சி கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2024

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்வரும் இறைச்சிக் கடைகள் 2024.04.10 ஆம் திகதி தொடக்கம் 2024.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன..

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 2024.04.01 - 2024.04.10 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 2024.04.10 பி..ப 2.00 மணி வரை
கேள்விதிறக்கும் திகதி :- 2024.04.10 பி.ப 2.00 மணி

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை **செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத்தபால் மூலம் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரியநேரத்திற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். இரண்டாவது **பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்** எனும் முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது 2024.03.29 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் எமது கேள்வி அறிவித்தல் விளம்பரத்தில் பார்வையிடலாம்.

### ஆட்டிறைச்சி மற்றும் மாட்டிறைச்சி கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான குத்தகை அட்டவணை - 2024

| இல | இறைச்சிக்கடைகள் | மாதாந்த வாடகை சபைக்குச் செலுத்த வேண்டியது | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| சங்கானை உப அலுவலகம் | | | | | |
| 01 | சங்கானை ஆட்டிறைச்சிக்கடை | 1,500.00 | 255,000.00 | 3,000.00 | 1,000.00 |
| வட்டுக்கோட்டை உப அலுவலகம் | | | | | |
| 01 | சங்கரத்தை மாட்டிறைச்சிக்கடை | 1,750.00 | 425,000.00 | 5,000.00 | 1,000.00 |

**தலைமை அலுவலகம்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை**
**சுழிபுரம்.**

**செயலாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை,**
**சுழிபுரம்.**

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை - சுழிபுரம்

## கடை வாடகைக்கு வழங்குதல் - 2024

வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கடையினை உள்ளூராட்சி ஆணையாளரின் 1980/46 ஆம் இலக்க 1980.12.11 ஆம் திகதிய சுற்றுநிருபத்திற்கு அமையவும் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட மாதாந்த வாடகைக்கு அமைவாகவும் வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக் குறைந்த ஒரே முறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விகள் வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் கோரப்படுகின்றது.

| தொடர் இல. | கடை விபரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | மீளளிக்க முடியாத கேள்விப்படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | சுழிபுரம் நவீன சந்தைக் கடை இல. - 05 | 405,000.00 | 8,100.00 | 1000.00 |

கடைகளை வாடகைக்கு வழங்குதல் தொடர்பான கேள்வி நடைமுறைக்கு மேற்குறித்த திகதிகள் பொருத்தமானது. மேலதிக நிபந்தனைகளை அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

**ச.பாலரூபன்,**
**தலைவர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைச் சபை,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை,**
**சுழிபுரம்.**
**2024.03.29**

(cr.41984) (N-1)

## குரு பூசை

**தவத்திரு விஸ்வப்பிரம்ம**
**ஸ்ரீநாகலிங்க சுவாமிகள்**
குருபூசை. 30.03.2024 சனிக்கிழமை சங்கானையில் உள்ள அவரது நினைவாலயத்தில் 11.00 மணி பஜனை, தொடர்ந்து விசேட பூஜை, மகேஸ்வர பூஜை, அன்னதான நிகழ்வும் இடம்பெறும்.
**உபயம் லோ. பாஸ்கரன் சாந்தி குடும்பம்.**

(CS/54540) J-1


## நாகபூஷணி திருமண சேவை

## இடமாற்றப்பட்டுள்ளது

திறந்திருக்கும் நேரம் 07.30 am - 5.30 pm

**10/2, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.** (BCAS campus க்கு அருகாமை)
பொருத்தமான மணமக்கள் ஜாதகம் எம்மால் தெரிவுசெய்து உடன் தரப்படும்.

077 138 7596, 071 999 9306


## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச்செயலக மாவட்ட உளவளதுணை அலகில் உளவள இணைப்பாளராக கடமையாற்றும் **திரு.நல்லையா உதயகுமார்** அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி நல்லையா சின்னப்பிள்ளை**

கடந்த 27-03-2024 ஆம் திகதி புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**நலன்புரி சங்கம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

(cr.41998) (N-1)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 . 05 . 1942



மறைவு 25 . 03 . 2023

**தனபாலசிங்கம் யோகாம்பிகை**

என் தெய்வமே அம்மா,
அப்பா எங்களை விட்டு மறைந்தபோது
தந்தைக்கு தந்தையாகவும், தாய்க்குத் தாயாகவும்
என்மீது அன்பையும், பாசத்தையும், கல்வி அறிவையும் தந்து
எனக்கு நல்வழி காட்டிய என் அன்புத் தெய்வமே என்
அம்மா! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் எங்கள்
உயிர் உள்ளவரை எம் இதயத்தில் வாழ்வீர்கள் எப்போதும்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**ஓராண்டைக் கடந்து உங்கள் பிரிவால் வாடும்**
**அன்பு மகன் வசந்தகுமார்,**
**மருமகன் சஜீனா மற்றும்**
**பேரப்பிள்ளைகள்.**


**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

(CS/54532) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

மலர்வு · 26 · 11 · 1964



உதிர்வு · 28 · 03 · 2024

### மகேசன் ஸ்ரீரங்கன் (ரங்கப்பா)

அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மகேசன் ஸ்ரீரங்கன் அவர்கள் நேற்று (28.03.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மகேசன் - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் பரிமளசிங்கம், இராசரத்தினம் (ஜேர்மனி), ஸ்ரீதரன் (சுதா - சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், முத்துப்பிள்ளை, புஸ்பராணி, ஜெயா (ஜேர்மனி), தயாவதி (கனடா), இராமநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், தவசீலன், காலஞ்சென்ற ராஜீ மற்றும் கிரிஷா, குணசீலன், ஜெயசீலன், அனுஷா, விஜயரூபன், சத்தியகுமார் (கனடா), றோய், மெரின் (ஜேர்மனி), அர்ச்சனா (ஜேர்மனி), அஜந்தன் (ஜேர்மனி), கனடாவைச் சேர்ந்த மயூரன், ரஜீவன், பிரபு ஆகியோரின் அன்புப் பேரனும், சின்னையா - சரஸ்வதி தம்பதியரின் பெறாமகனும், சுவிஸைச் சேர்ந்த திருமாறன், திருமாவளவன் ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், காலஞ்சென்றவர்களான நடராசா, இராசையா ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.03.2024) வெள்ளிக்கிழமை அரியாலை 47/2, நொத்தாரிஸ் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**47/2, நொத்தாரிஸ் வீதி,**
**அரியாலை.**

(CS 28366) S-1

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### திருமதி வசந்தா கணேசராசா

யாழ்ப்பாணம், கந்தர்மடம், இல.260, அரசடி வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வசந்தா கணேசராசா அவர்கள் நேற்று (28.03.2024) வியாழக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், தம்பிராசா கணேசராசா (ஓய்வு பெற்ற பதில் நீர்ப்பாசனப் பொறியியலாளர் - யாழ்ப்பாணப் பிரிவு நீர்ப்பாசன இலாகா, ஓய்வு பெற்ற சிரேஷ்ட தொழில்நுட்ப உதவியாளர்) அவர்களின் அன்பு மனைவியும், செல்வி பிறகாசினி கணேசராசா (ஆசிரியை, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி) அவர்களின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.03.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**த.கணேசராசா**
**க.பிறகாசினி**

**021 222 7270**

(CS 28367) S-1

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த மாதம் 28.02.2024 புதன்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

### தர்மலிங்கம் தர்மஜெயசூரியர்

**(Rtd. Customer Services Manager, Bank of Ceylon)**

**தோற்றம்** **22.08.1949** **மறைவு** **28.02.2024**

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் 29.03.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**(இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்)**

எமது குடும்பத்தலைவர் சிவபதம் அடைந்த செய்திகேட்டு நேரில் மற்றும் தொலைபேசி மூலமும் சமூகவலைத்தளங்கள் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியோருக்கும் பத்திரிகையிலும், அஞ்சலிப்பிரசுரங்களையும், பதாகைகள் மூலமும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட அன்பு உள்ளங்களுக்கும், இறுதிக் கிரியைகளிலும், இறுதி யாத்திரையிலும் கலந்துகொண்டோருக்கும், எமக்கு உணவுகள் தந்த பெருமைக்குரியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்**

**த.ரோகினிதேவி (மனைவி) : 021 223 0785**
**த.ரோகன்ராஜ் (மகன்) : 077 175 8485**
(Rohan Enterprise)
**த.தேனுகன் (மகன்) : 077 889 2185**

**அரச வீதி,**
**உரும்பிராய் கிழக்கு,**
**உரும்பிராய்.**

(CS/54554) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கீதபூஷணம் அமரர் எஸ்.கணபதிப்பிள்ளை இசையால் உலகை வசமாக்கிய பெருந்தகை

கே.எஸ்.சிவஞானராஜா

முதுபெரும் இசைக்கலைஞர் அமரர் சுப்பையா கணபதிப்பிள்ளையின் மூன்றாவது ஆண்டு நினைவை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.



பொன்னாலை வரமாக ஈந்த ஒரு இசைப் பெட்டகம் இன்று அள்ளக் அள்ளக் குறையாத இசையூற்றாகப் பாய்கிறது. ஸ்வரஞானமும், லயஞானமும், மனோதர்ம வாஞ்சையும், ஸ்வர லாவண்யமும் மேடை தர்மமும் நிரம்பிய முதிர்ந்த இசைக்கலைஞனே சங்கீத பூஷணம் சுப்பையா கணபதிப்பிள்ளையாவார். மிகவும் எளிமையான உருவம், வாய் திறந்தால் நளின வார்த்தைகள், இராமபிரானின் வில் போல வளைந்த உடம்பு, பிள்ளையாரின் கடம் போன்ற தொந்தி, கம்ப காவியமென்கின்ற மனோ தர்மம், இதயத்துடிப்பை ஒத்த காலப்பிரமாணம், தவறுகளையும் பிழைகளையும் சுடச்சுடக் கண்டுபிடிக்க வல்லதான சுபாவம், சீடர்களுக்காகத் தன்னையே முழுமையாக அர்ப்பணிக்கும் குருதாட்சண்யம் ஆகிய இவையனைத்துக்கும் ஏதுவான உரிமையாளரே கலாபூஷணம் கணபதிப்பிள்ளையாவார்.

பொன்னாலை என்ற பொன் நெகிழ்ந்த கிராமத்தில், சுப்பையா - வள்ளியம்மை தம்பதிகளுக்கு மகனாக 1939ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 16ஆம் திகதி பிறந்தார். பெரிய தந்தையார் வரகவியாகவும், அண்ணாவியாராகவும் விளங்கிய காரணத்தால் இவருக்கும் இவரது புலமைவரப் பிரதான காரணமாயிற்று. ஆரம்பகால வாழ்வு மிகுந்நத சிரமமானதாக இருந்த போது, தந்தையாரின் பிரிவும் தாயாரின் கடின உழைப்பும் இவரைப் புடம்போட்டு எடுத்தன. 'நெல்லியான்' என்ற அடுத்ததோர் கிராமம் இவர்தம் குடும்பத்தை மேலும் வளர்ப்பதற்கு இடமளித்தது. பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை, ஐக்கிய சங்க சைவ வித்தியசாலை, பன்னாகம் மெய்கண்டான் வித்தியாலயம், சுழிபுரம் விக்ரோறியாக கல்லூரி ஆகிய பாடசாலைகள் இவரது கல்விக்கு வாய்ப்பளித்து வெற்றி கண்டன.

1958ஆம் ஆண்டு 'சிதம்பரம் போகாமல் இருப்பேனா?' என்ற பாடலை நந்தனாராக நடித்துப் பாடி நெக்குருக வைத்ததன் பேறாக 1959ஆம் ஆண்டு சிதம்பரம் அண்ணாமலைக்குச் செல்லவேண்டிய பாக்கியம் கிடைத்தது. நடைபெற்ற தேர்வில் சித்தி பெற்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அனுமதியும் கிடைத்தது. இதன் பேறாக 4 வருடங்கள் சங்கீத பூஷணப்பட்டதாரியாக வருவதற்கான இசைப்பாடத்தரமதை முழுமையாகக் குருசிஷ்ய பாணியில் கற்றுத்தேறினார். எம்.எம்.தண்டபாணி தேசிகரின் மனோதர்மம், சாகித்திய பாவம், ஆன்மீக வாலாயம் யாவும் ஒருங்கே சேர்ந்து இவருக்குப் படிமானமாக விளங்கியதால் போட்டிகளில் தங்கப் பதக்கத்தையும் இறுதிப் பரீட்சையில் முதற் பிரிவிலும் சித்தி பெற்று இலங்கைக்குச் சிறப்பை முதன்மையாக்கினார்.

1966ஆம் ஆண்டில் அனலைதீவு சிவ மகா வித்தியாலயத்தில் சங்கீத ஆசிரிய நியமனம் பெற்றுக்கொண்ட இவர், காரைநகர் இந்துக் கல்லூரி, காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி, பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, குருணாகல் இந்து மகா வித்தியாலயம் ஆகியவற்றில் தன் ஆசிரியப் பணியை மேன்மைப்படுத்தினார். தொடர்ந்து சங்கீத வட்டாரக் கல்வி அதிகாரி, உதவிக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர் எனப் பணியாற்றினார். இளைப்பாறும் வரை பிரதிக் கல்விப் பணிப்பாளராக யாழ்ப்பாணம், கோப்பாய், மருதனார்மடம், வலிகாமப் பிரிவிலே கடமையாற்றி, இசைப்பணி மேலோங்க வழிசமைத்தார். ஆசிரிய, மாணவ வாண்மையும் வளர்ச்சியும் அடைய சுருதி லய ஸ்வர ஸாகித்திய அகார சாதகப் பயிற்சிகளைப் பயனுள்ள வகையில் வழங்கினார்.

சுருதி சேர்க்கவும் சுருதியில் நிற்கவும், கருதிப்பாடவும், கருவியில் பயிலவும், அறுதியில் பொருந்தவும், இறுதியில் விருந்தாகவும், உருகிப்பாடவும், உறுதியாய்ப் போடவும் மாணவர்களைச் செம்மைப்படுத்தின சங்கீத சந்தேகங்கள் சந்தோஷமாய் திருந்தின.

தரம் ஒன்று தொடக்கம் பதின்மூன்றுவரையிலான சங்கீதப் பாடத்திட்டத்தினை முறையாகத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தினார். வட இலங்கைச் சங்கீத சபையினால் நடத்தப்படும் ஆறாந்தரம் வரையான சங்கீத பாடத்திட்டத்தினை உருவாக்கி சாதனை படைத்தார். ஆறாந்தர கலாவித்தகர் பரீட்சைக்கு கற்பித்தல் முறை ஆற்றுகை நெறிகளை அறிமுகப்படுத்தி அதன் தரங்களைத் தராதரமாக்கினார். ஓர் ஆசிரிய தரத்திலுள்ளவன் பற்பல திறமைகளை வெளிப்படுத்த வேண்டும் என்ற தோறணையில் எண்ணற்ற செயற்கரிய செயல்களை ஆற்றினார்.

கலாபூஷணம், கலைஞானகேசரி, சுரலயகானமணி, ஸ்வரபதகேசரி, கலைப்பிரவாகம், சிவத்தமிழ் விருது, கலைஞான திலகம், இசைக்கலைவேந்தன் கலைவாதிரி ஆளுநர் விருது, விபுலானந்தர் விருது, பல்லவி கடாசன் என பல விருதுகள் இவரை அலங்கரிக்கின்றன. இப்பேர்ப்பட்ட ஒப்பற்ற திறமையாளன் மண்ணோர் யாவரும் ஜீவிக்கும்படி வாழ்ந்துவிட்டு விண்ணோர் பேறாகும்படியாக விடைபெற்று இன்றுடன் மூன்றாண்டுகள் முழுமை பெறுகின்றன.

## பயங்கரவாதிகள் நால்வர் பாகிஸ்தானில் கொலை!

இஸ்லாமபாத், மார்ச் 29

பாகிஸ்தானின் கடற்படைத்தளத்தின் மீது தாக்குதல் நடத்த முயன்ற பலூசிஸ்தான் தீவிரவாதிகள் நால்வர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானின் பலூசிஸ்தான் மாகாணம் துர்பத் நகரில் பி.என்.எஸ். சித்திக் கடற்படைத் தளம் அமைந்துள்ளது. அங்கு சீனாவின் ட்ரோன்கள் நிறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில், பி.என்.எஸ். சித்திக் கடற்படைத் தளத்துக்குள் கடந்த புதன்கிழமை இரவு 4 மர்மநபர்கள் நுழைய முயன்றுள்ளனர். இதையடுத்து இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டிலேயே நால்வரும் கொல்லப்பட்டனர் என்று பலூசிஸ்தான் அமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளது. (ம)

சர்வதேச நீர் தினத்தை முன்னிட்டு, தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபையின் கிளிநொச்சி மாவட்டப் பொறியியலாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில், 'உதிரம் கொடுப்போம்! உயிரைக் காப்போம்!' எனும் தொனிப்பொருளில் குருதிக்கொடை நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்டத்திலுள்ள, ஏனைய திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப -113-214)





முல்லைத்தீவு மாவட்ட விவசாய அபிவிருத்திக்குழுக் கூட்டம், மாவட்ட செயலர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ப13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரி பிரதேசசபையும் கைதடி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் ஒன்றியமும் இணைந்து மகளிர் தினவிழாவை, இரத்தினமணி மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை முன்னெடுத்தன. (ப-159)



## படப்பிடிப்பாளர்கள் கௌரவிப்பு!

முல்லைத்தீவு மாவட்டத்தில் 1968 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் படப்பிடிப்பாளர்களாகச் செயற்பட்டவர்களை, முல்லைத்தீவு மாவட்ட படப்பிடிப்பாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தினர் அண்மையில் கௌரவித்தனர்.

புதுக்குடியிருப்புப் பிரதேசசபை மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் சி.குகநேசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விருந்தினர்களாக முல்லைத்தீவு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் புஷ்பராணி புவனேஸ்வரன், புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத் தலைவர் தர்மலிங்கம் நவநீதன் மற்றும் வவுனியா மாவட்ட புகைப்படப் பிடிப்பாளர்கள் சங்கத் தலைவர், யாழ். மாவட்ட புகைப்படப் பிடிப்பாளர்கள் சங்கச் செயலாளர், கிளிநொச்சி மாவட்ட புகைப்படப் பிடிப்பாளர்கள் சங்கத் தலைவர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-19)

புதிய சாளம்பைக்குளம், மஸ்ஜிதுல் அக்ஸா ஜும்மா பள்ளியில் இப்தார் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் வவுனியா மாவட்ட ஜம்மியதுல் உலமா சபைத் தலைவர் அஷ்ஷேக் என்.பி.ஜீனைத் மதனி, வவுனியா பல்கலைக்கழக இஸ்லாமிய மாணவர்கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-18)



# மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 11 . 1937



மறைவு 27 . 03 . 2024

## திருமதி காசிப்பிள்ளை குணபூஷணம்

**(விசாலாட்சி சமேத காசி விஸ்வநாத சிவன் தேவஸ்தான தர்மகர்த்தா)**

சிவன் கோவிலடி, வட்டு மேற்கு, வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கொண்ட திருமதி காசிப்பிள்ளை குணபூஷணம் அவர்கள் நேற்று முன்தினம் (27.03.2024) புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம் - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா - கற்பகம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வைத்தியர் அ.க.காசிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், மைத்திரேயி, சங்கமித்திரா, சுமந்திரன், நளாயினி, வாசுகி, சுலபை ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சவுந்தரராஜா (உப தபால் அதிபர்), ரவிச்சந்திரன் (வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்.வலயம்), சிவதாரணி, ஞானச்சந்திரன், சர்பநடராஜன் ஆகியோரது அன்பு மாமியாரும், ஜனந்தன், சிவதனுசன், திவ்வியா, அபிநயா, துஷாரா, சிவப்பிரியா, கிருசிகா, அனோஜன், மைதிலி, விசாலினி, சுதநடேஸ், சுவேதினி, ராகுல் ஆகியோரின் பாசமிகு பேத்தியும், திஷிகாவின் பூட்டியும், காலஞ்சென்றவர்களான இராசவைத்தியர் அ.க.குமாரசாமி, மாணிக்கம், சிவஞானவதியார், சந்திரசேகரம்பிள்ளை, புஷ்பபாலன் ஆகியோரின் மைத்துனியும், அரியசுவர்ணபுவர்ணராணி, சித்திரபூபதி, காலஞ்சென்ற மகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (31.03.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவன் கோவிலடி,
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**மகன்: கா.சுமந்திரன்**
**077 398 0566**

(CS 28368) S-1




தமிழீழமக்கள் விடுதலைக் கழகத்தின் முக்கியஸ்தர் வேலாயுதம் நல்லநாதர்(ஆர். ஆர்.) நினைவாக இலவச குடிதண்ணீர் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வவுனியா கோவில் குளத்தில் அமைந்துள்ள உமாமகேஸ்வரன் நினைவு இல்லத்தில் இந்த இலவச குடிதண்ணீர்த்திட்டம் ஆரம்பித்துவைக்கப்பட்டதுடன், தாக சாந்தி நிலையமும் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் தமிழீழமக்கள் விடுதலைக் கழகத்தின் முக்கியஸ்தர்களான க.சந்திரகுலசிங்கம், வடமாகா சபை முன்னாள் உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், சிவநேசன் மற்றும் கழகத்தின் முக்கியஸ்தர்கள், உறவினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-110-18)

## சமூக வலைத்தளங்கள்; சிறுவர்களுக்குத் தடை!

*நியூயோர்க், மார்ச் 29*

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் 14 வயதுக்குக் குறைந்த சிறுவர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. சமூக ஊடகத் தளங்கள் மூலம் ஏற்படும் மனநலப் பாதிப்புகளிலிருந்து சிறுவர்களை இந்தப் புதிய சட்டம் பாதுகாக்கும் என்று டிசேன்ட்டிசின் ஆதரவாளர்கள் கூறுகின்றனர். (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகரப் பகுதியில் நாளை ஆரோக்கிய பவனிக்கு ஏற்பாடு!

## தூய்மைப் பணிகளும் இடம்பெறும்

யாழ்ப்பாணம், மார்ச் 29

சர்வதேச சுழியக் கழிவு தினமான மார்ச் 30ஆம் திகதி (நாளை) சிகரம் நிறுவனத்தின் வடமாகாண சுற்றுலா சேவைப் பிரிவினின் ஒழுங்குபடுத்தலில், யாழ் மாநகர பகுதியில் தூய நகரை உருவாக்குவதை இலக்காகக் கொண்ட 'யாழ் ஆரோக்கிய பவனி' தூய்மையாக்கல் பணியும், விழிப்புணர்வுச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தியத் துணைத்தூதரகம், யாழ். மாநகர சபை, யாழ். பிரதேச செயலகம், தொல்லியல் திணைக்களம் மற்றும் யாழ். பொலிஸாரின் நேரடிப் பங்களிப்பு மற்றும் ஆதரவுடன் மேற்கொள்ளப்படவிருக்கும் இந்தத் திட்டத்தின் கீழ், யாழ். நகரின் பிரதான வீதிகள் சிலவற்றின் ஊடாகவும், யாழ்ப்பாணத்தின் சுற்றுலா ஈர்ப்பு வலயமாகக் காணப்படும் மணிக்கூட்டுக் கோபுரம் முதல் பண்ணை சுற்றுவட்டம் வரையிலான பகுதியிலும் தூய்மையாக்கல் பணி முன்னெடுக்கப்பட வுள்ளது.

யாழ்.ஆரியகுளம் சந்திப் பகுதியில் காலை 7 மணியளவில் ஆரம்பிக்கும் இந்தப் பணி, 3 வீதிகளூடாக யாழ். பண்ணைப் பகுதி வரையில் மேற்கொள்ளப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. ஓர் அணியினர் ஆரியகுளம் சந்தியிலிருந்து பருத்தித்துறை வீதியூடாக மருத்துவமனை வீதியையடைந்து, அங்கிருந்து மகாத்மா காந்தி வீதியூடாக, மணிக்கூட்டுக் கோபுரம், பொதுநூலகம், துரையப்பா விளையாட்டரங்கு, யாழ். கோட்டை, பண்ணை நடை பாதை ஊடாக பண்ணைச் சுற்றுவட்டத்தை அடைவர்.

இரண்டாவது அணி, ஆரியகுளம் சந்தியிலிருந்து ஸ்ரான்லி வீதியூடாக முட்டாசு கடைச் சந்தியை அடைந்து, கே.கே.எஸ். வீதியூடாக, தபால்கந்தோர் சந்தியைக் கடந்து சுற்றுவட்ட வீதியூடாக பண்ணைச் சுற்றுவட்டத்தை அடையும்.

மூன்றாவது அணி, யாழ். பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பிரதான வீதி தண்ணீர்த் தாங்கிப் பகுதியிலிருந்து ஆரம்பித்து கடற்கரை வீதியூடாக பண்ணை சுற்றுவட்டத்தை வந்தடையும்.

பண்ணை சுற்றுவட்டப்பாதையை அனைத்து அணிகளும் வந்தடைந்ததும், காலை 9.30 மணியளவில் நில்கோ விடுதியினரின் ஏற்பாட்டில் தாகசாந்தி வழங்கப்படுவதுடன், பண்ணை நடைபாதை, யாழ். கோட்டை உள்ளிட்ட சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவரும் பகுதிகளை நிரந்தரமாக தூய்மையாகப் பேணும் வழிவகைகள் குறித்த கலந்துரையாடலும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இந்த நிகழ்வில், இந்தியத் துணைத் தூதுவர், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், யாழ். மாநகர ஆணையாளர், மாநகரசபையின் உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் மற்றும் யாழ். வணிகர் கழக பிரதிநிதிகள், உல்லாச விடுதிகளின் உரிமையாளர்கள் எனப் பல தரப்பினரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம)

# நினைவுப் பகிர்வு நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 29

திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர், இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை நினைவுப்பணி மன்றங்கள் இணைந்து நடத்தும் நினைவுப் பகிர்வு, திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலையத்தில் நாளை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையுரையையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தி.செல்வமனோகரன் வரவேற்புரையையும் நிகழ்த்தவுள்ளனர்.

ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் நினைவுப் பகிர்வை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன் ஆற்றவுள்ளார்.

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை நினைவுப்பகிர்வை, தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி இ.இரகுபரன் ஆற்றவுள்ளார். (ம)

# 53 மசாஜ் நிலையங்கள் உடன் மூடப்படுகின்றன!

கொழும்பு, மார்ச் 29

நீர்கொழும்பு, கொச்சிக்கடை மற்றும் சீதுவ ஆகிய பொலிஸ் பிரிவு களில் இயங்கிவந்த 53 மசாஜ் நிலையங்களை உடன் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மசாஜ் நிலையம் என்ற போர்வையில் விபச்சாரம் உள்ளிட்ட சட்டவிரோத நடவடிக்கைகள் இடம்பெற்றுவந்த நிலையங்களே இவ்வாறு மூடப்படவுள்ளன.

மேற்படி மசாஜ் நிலையங்களில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் பாலியல் தொழிலில் ஈடுபட்ட 137 பெண்கள் மற்றும் 8 ஆண்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு நடத்தப்பட்ட சோதனையின்போது இருவருக்கு 'எய்ட்ஸ்' தொற்று இருப்பதும் உறுதிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## ஆக்கிரமிக்கப்பட்ட...

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அண்மையில் வடமாகாணத்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொதுமக்களின் விவசாயத்துக்காக ஒருதொகுதிக் காணிகளை விடுவித்திருந்தார். அத்துடன், 1985ஆம் ஆண்டு காணிகள் எவ்வாறான கட்டமைப்பின்கீழ் இருந்தனவோ அந்தக் கட்டமைப்பைப் பேணுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார். இதற்கு முன்னரும்கூட 1985ஆம் ஆண்டு காணிகள் இருந்த கட்டமைப்புத் தொடர்பில் ஜனாதிபதி கருத்துத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையிலேயே, 1985ஆம் ஆண்டுக்குப் பின்னர், வன உயிரிகள் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்ட காணிகள் ஏப்ரல் மாதத்தில் விடுவிக்கப்படும் என்றும், அதற்கான நடவடிக்கைகள் விரைந்து முன்னெடுக்கப்படும் எனவும் ஆளுநர் தெரிவித்துள்ளார். (அ-ம-26)

## 7 ஆலயங்களில்...

அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் காணப்படும் 21 வழிபாட்டுத் தலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 7 ஆலயங்கள் வழிபாடுகளுக்காக விடுவிக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது. கட்டுவன், வயாவிளான் மற்றும் பலாலி ஆகிய பகுதிகளில் காணப்படும் ஆலயங்களே வழிபாட்டு நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்படவுள்ளன. சுமார் 30 வருடங்களுக்கு மேலாக எவ்வித வழிபாடுகளையும் கண்டிராத இந்த ஆலயங்களுக்கு மக்களை அழைத்துச் செல்வது தொடர்பில் இராணுவத்தினருடன் கலந்துரையாடப்படும் என்றார்.

இதன்போது, "ஆலயங்களுக்கு இவ்வாறு மக்களை அழைத்துச் செல்லும் போது ஊடகவியலாளர்களையும் அழைத்துச் செல்லவேண்டும். ஊடகவியலாளர்கள் உட்சென்றால்தான் இந்த விடயங்கள் வெளிவரும்" என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கோரிக்கை விடுத்தனர். இதுதொடர்பில் பாதுகாப்பு அமைச்சுடன் உரையாடி தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்று ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர்கள் தெரிவித்தனர். (அ-ம-26)

## யுவதியின்...

அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் தமது முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-110-18)

## பின்னணியில்...

வித்ததாவது:-

'அரகலய' தொடர்பான விசாரணைகள் மெதுவாகவே இடம்பெறுகின்றன. சொத்துகள் சேதமாக்கப்பட்டதன் பின்னணியில் ஜே.வி.பி. இருந்ததாக குற்றம் சாட்டப்படுகிறது. நான் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கேட்டுக்கொள்வது என்னவென்றால் மதத்தலைவர்களின் தலையீடு இன்றி விசாரணைகளை வெற்றிகரமாக முடிக்கவேண்டும் வாருங்கள் எனக் கூறினார். 'அரகலய' போராட்டத்தின்போது, தமது சொத்து களைப் பாதுகாப்பதற்கு இராணுவத்தினரும் பொலிஸாரும் தவறிவிட்டனர். 1977ஆம் ஆண்டு இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளின்போதும் எமது வீடு சேதமாக்கப்பட்டது. ஆனால், இதற்குரிய இழப்பீடு இதுவரை கிடைக்கவில்லை எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-ம-6)

## தொலைபேசி...

4 ஆம் திகதி அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறு நீதிமன்றம் தெரிவித்தது.

அத்துடன், பொன்னாலை கடற்படை முகாமுக்கு அருகில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமராவின் டி.வி.ஆரை பகுப்பாய்வுக்கு உட்படுத்தவேண்டுமென பொலிஸார் மன்றில் கோரிக்கை விடுத்திருந்தனர். பொலிஸாரின் இந்த விண்ணப்பமும் நீதிமன்றால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. வழக்கு எதிர்வரும் 4ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (அ-ம-26)

## விதை...

தொற்றுக்கு உட்பட்ட நிலையில் கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் மீட்கப்பட்டது. இந்த வகை உருளைக்கிழங்கு அவுஸ்திரேலியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது என்றும், இறக்குமதி செய்யும்போதே உருளைக்கிழங்கில் பக்றீரியாத் தொற்று இருந்தமையால் அது கட்டுநாயக்கவில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தது என்றும் விசாரணைகளில் தெரியவந்திருந்தன.

இவ்வாறிருக்கையில், கட்டுநாயக்கவின் தனிமைப்படுத்தப்பட்ட விதை உருளைக்கிழங்கு எவ்வாறு யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்பட்டது என்பது தொடர்பாக இன்னமும் உரிய தெளிவூட்டல்கள் வழங்கப்படாததையடுத்தே, இந்த விடயம் தொடர்பில் முழுமையான விசாரணை அறிக்கை சமர்ப்பிக்குமாறு மாகாண விவசாய அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை - வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் விவசாய நவீனமயமாக்கல் செயற்பாடு தொடர்பில் மாகாணசபைக்கு அறிவிக்க வேண்டும் எனவும் குறித்த செயற்றிட்டத்தின் பிரதிப் பணிப்பாளருக்கு ஆளுநர் உத்தரவிட்டார். (அ-ம-26)

## போதைப்பொருள்...

'யுக்திய' சுற்றிவளைப்பின்போது மேற்கொள்ளப்படும் கைது நடவடிக்கைகளில் சிக்குபவர்களில் பெரும்பாலானோர் சிறு குற்றப்பின்னணி உள்ளவர்களாகவே இருக்கின்றனர். இவர்களைக் கைது செய்து புனர்வாழ்வு வழங்குவதன்மூலம் போதைப்பொருள் கலாசாரத்தைக் கட்டுக்குள் கொண்டுவர முடியாது. ஆதலால், போதைப்பொருள் கடத்தலிலும், வர்த்தகத்திலும் ஈடுபடும் பெரும்புள்ளிகளைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் பொலிஸாருக்கு ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் வைத்து மேலும் வலியுறுத்தப்பட்டது. (அ-ம-26)

## மரத்தால்...

துள்ளார். முதற்கட்ட சிகிச்சைக்குப் பின்னர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சரிவிலிருந்து மீண்டுவந்து ராஜஸ்தான் எழுச்சிவெற்றி

**ஐ.பி.எல். தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில், ரியான் பராக்கின் அதிரடியால் மிகப்பெரும் சரிவிலிருந்து மீண்டுவந்து வெற்றிபெற்றது ராஜஸ்தான் றோயல்ஸ்.**



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டெல்லி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. ராஜஸ்தானின் ஆரம்பம் படுமோசமாக அமைந்தது. ஜெய்ஸ்வால் 5, பட்லர் 11, சாம்சன் 15 என சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். அத்துடன், அவர்கள் அளவு கடந்த நிதானத்தையும் வெளிப்படுத்தியதால் 10 ஓவர்களில் 53 ஓட்டங்களையே ராஜஸ்தானால் பெற முடிந்தது. நிதானத்தை வெளிப்படுத்திய ரியன் பராக்குடன், இணைப்பாட்டம் அமைத்தார் அஸ்வின். அஸ்வின் அதிரடியாக விளையாடி 19 பந்துகளில் 29 ஓட்டங்களைச் சேர்த்தார். அஸ்வினின் ஆட்டம் ராஜஸ்தானுக்கு திருப்பத்தைக் கொடுத்தது என்றால் மிகையாகாது. ஜூரல் 12 பந்துகளில் 20 ஓட்டங்களைப் பெற்றார். கொஞ்சம்கொஞ்சமாக அதிரடிக்குத் திரும்பிய ரியன் பராக் கடைசி மூன்று ஓவர்கள் இருக்கும்போது ருத்ர தாண்டமாடினார். நோர்ஜி வீசிய இறுதி ஓவரில் 25 ஓட்டங்களை ரியான் விளாசினார். முடிவில் 185 ஓட்டங்களைப் பெற்று பலமான நிலையை அடைந்தது ராஜஸ்தான்.

பந்துவீச்சில் கலீல் அஹமட், முகேஸ் குமார், குல்தீப் யாதவ், நோர்ஜி மற்றும் அக்சர் பட்டேல் ஐவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய டெல்லி அணிக்கு வோர்ணர், மிச்செல் மார்ஷ் இணை நல்லதொரு ஆரம்பத்தைக் கொடுத்தாலும் அபாரமான அடித்தளம் என்று சொல்லுமளவுக்கு ஆட்டம் அமையவில்லை. 23 ஓட்டங்களுடன் மிச்செல் மார்ஷ் வெளியேறினார். பன்ட் 26 பந்துகளில் 28 ஓட்டங்களைப் பெற்றார். அவரின் இந்த நிதானம் டெல்லிக்கு கூடுதல் தலையிடியை ஏற்படுத்தியது. 49 ஓட்டங்களுடன் வோர்ணரும் ஆட்டமிழக்க டெல்லியின் கதை முடிந்துவிட்டதாகவே கருதப்பட்டது. ஆனால், திரிஸ்டன் ஸ்டப்ஸ் இறுதியில் அதிரடியைக் கையிலெடுத்து இலக்கை நெருங்கிவந்தார். அவர் 23 பந்துகளில் 44 ஓட்டங்களைக் குவித்தபோதிலும், முடிவில் 12 ஓட்டங்களால் வெற்றிபெற்றது ராஜஸ்தான். (ம)


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் திருநெல்வேலி அம்மாச்சி உணவகத்திற்கு முன்பாக 2 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தரகர்கள் தொடர்பு கொள்ளவேண்டாம்.

தொடர்பு:- 076 206 1703

(CS34563) J-1

## வீடு வாடகைக்கு

சாவகச்சேரி நகரிலுள்ள புகை பரிசோதனை நிலையத்திற்கு முன்பாக சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு. அலுவலக தேவைகளுக்கு மட்டும் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
077 649 1027

## பண வசூலிப்பாளர்
### (COLLECTION OFFICER)

மேற்குறிப்பிட்ட பதவிக்கு தகைமையுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. **பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.**

ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் (30.03.2024) சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் ந.ப 12.00 மணிவரை தங்கள் சுயவிபரக் கோவையுடன் நேரில் சமுகம்தரவும்.



உதயன்

**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**


# கிம் - கிஷிடா சந்திக்க வாய்ப்பு

பியாங்யாங், மார்ச் 29



வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் மற்றும் ஜப்பானியப் பிரதமர் புமியோ கிஷிடா இருவரும் சந்தித்துப் பேச்சு நடத்த வாய்ப்புள்ளதாக கிம் ஜோ உன்னின் சகோதரி தெரிவித்துள்ளார்.

கிம் ஜோங் உன்னைச் சந்திப்பதற்கு, ஜப்பானியப் பிரதமர் தொடர்ச்சியாகத் தனது விருப்பத்தைத் தெரிவித்து வருகின்றார். ஆனால் டோக்கியோவின் வெளிவிவகாரக் கொள்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்தாதவரையில் அது சாத்தியமில்லை என்று கிம் ஜோ ஜாங் அண்மையில் தெரிவித்திருந்தார். இந்த நிலையிலேயே, முன்னைய கருத்துக்கு முற்றிலும் மாறுபட்ட விதமான கருத்தாக, வடகொரிய அதிபரும் ஜப்பானியப் பிரதமரும் சந்திக்க வாய்ப்பிருப்பதாக கிம் ஜோ ஜாங் தற்போது தெரிவித்துள்ளார்.

தென்கொரியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா இணைந்து அண்மையில் முன்னெடுக்கும் போர்ப் பயிற்சிகள் காரணமாக வடகொரியா மிகுந்த கோபத்தில் உள்ளது. வடகொரியாவை அச்சமூட்டும் தென்கொரியாவை முற்றாக அழிப்போம். தென்கொரியாவுக்கு உடந்தையாக உள்ள ஜப்பானையும் தாக்குவோம் என்று வடகொரிய அதிபர் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் எச்சரிக்கை விடுத்திருந்தார். இதனால் தீபகற்பத்தில் போர்ப்பதற்றம் ஏற்பட்டிருந்த பின்னணியில் தற்போது இந்த இரு தலைவர்களும் சந்தித்துப் பேச்சு நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)


## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
09 . 05 . 1956



சிவன் அடியில்
29 . 03 . 2018

சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியைப் பிறப்பிடமாகவும்,
சுவிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த,

**மாமனிதர் [குணாளன் மாஸ்ரர்]**

**சற்குணசிங்கம் ஞானகுணாளன்**

கண்ணீர் பிரளயத்தில் தவிக்க விட்டு
ஆறாண்டுகள் சென்று விட்டன குணாள்
வேர் அறுந்த விருட்சமாய்
விழுது இழந்து தவிக்கின்றோம்
உனது புன்னகை நினைத்து உருகி
உனது ஆத்மா சாந்தியடைய
சப்பச்சிப்பிள்ளையாரை வேண்டிநிற்கிறோம்.

உனது பிரிவால் தவிக்கும்
அம்மா குடும்பத்தினர்
உற்றார், உறவினர்.

(cs.28247) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.